**R5294**

## "THE SPIRITS OF JUST MAN MADE PERFECT"

# "பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள்"

"நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்."– (எபிரேயர் 12:22,23)

அப்போஸ்தலர் இங்கே இந்த யுகத்தின் முடிவு அல்லது நிறைவைக் குறித்து சபையை நோக்கி கூறுகிறார். இந்த யுக முடிவில் அசைக்கக் கூடியது எல்லாம் அசைக்கப்படும். அதாவது அசைக்க முடியாததைத் தவிர சகலமும் அசைக்கப்படும் என்று இந்த சூழல் குறிப்பிடுகிறது. அப்பொழுது வந்திருக்கும் ராஜ்யம் மட்டுமே அசைக்க முடியாததாக இருக்கும். அப்போஸ்தலர் இதன் ஆரம்பத்தை, சீனாய் மலையில் ஆரம்பித்த நியாயபிரமாணத்தோடு ஒப்பிடுகிறார். அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் இடி முழக்கங்களையும், மின்னல்களையும் எக்காள சத்தங்களையும் கேட்டார்கள்; மலை புகைகிறதையும் கண்டார்கள்; "மோசே, தேவன் இருந்த கார்மேகத்துக்குச் சமீபமாய் சேர்ந்தான்." மோசே மலையினிடத்திற்கு சென்றார். இவையெல்லாம் நிழலாக இருந்தன. நிழலான மத்தியஸ்தர் மோசேயினால் நியாயப்பிரமண உடன்படிக்கை முத்திரையிடப்பட்டது. (யாத்திராகமம் 20:18-22)

நாம் நெருங்குவது தான் உண்மையானது. இந்த யுக முடிவில் சபையானது அடைவது தான் உண்மையானதாக இருக்கும். அப்பொழுது உலகில் கிளர்ச்சி, சச்சரவுகளாகிய இடி முழக்கங்களும் மின்னல்களும் இருக்கும். நிழலில் இருந்தது போலவே உண்மையானதிலும் இருக்கும். ஜனங்கள் பயத்திலும் கஷ்டங்களிலும் சோர்ந்து போவார்கள். ஆபத்து நாட்களின் முடிவில் புது உடன்படிக்கை தொடங்கப்படும். மேசியாவாகிய இயேசு மத்தியஸ்தராக இருப்பார். அவர் மகிமையடைந்த தலை மற்றும் அவரது சரீரமாகவும் இருப்பார்.

நாம் முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இதில் தலையாகிய கிறிஸ்துவும் இந்த யுகத்தில் இப்பொழுதும் கடந்த காலத்திலும் உள்ள விசுவாசிகள் உள்ளடங்கி இருப்பார்கள். அது சிறுமந்தையையும் திரள் கூட்டத்தாரையும் உள்ளடக்கியிருக்கும். ஏனெனில் அவர்கள் சேர்ந்து பரலோகத்தில் பேரெழுத்தப்பட்டுள்ள முதற்பேறானவர்களின் சபையை அமைக்கிறார்கள். சிறுமந்தை கூட்டிச் சேர்க்கப்பட்ட பிறகு இந்த செயல் விளக்கம் நடைபெறும். நாம் ஒவ்வொரு நாளும் இந்த காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது கூட நாம் சற்று அதனுள்ளே சென்று கொண்டிருக்கிறோம்.

"நீதிமான்களின் ஆவிகள்" பூரணமாக்கப்படும் இடத்தை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்றும் அப்போஸ்தலர் கூறுகிறார். இங்கே அப்போஸ்தலர் முடிவில் முதற்பேறானவர்களின் சபையின் அங்கங்கள் அனைவரையும் குறிப்பிட்டுவிட்டு பிறகு அதில் கொஞ்ச பேரை குறிப்பிடுவார் என்று நாம் யூகிப்பது சரியாக இருக்காது. ஆகையால் இந்த சொற்றொடர் இன்னொரு வகுப்பாரை குறிப்பிடுகிறது என்று நாம் முடிவு செய்யலாம். இயற்கையாகவே நாம் ஆராய முற்படும் போது, நமது சிந்தனை, சபையானது மகிமையடையும் வரை காத்துக் கொண்டிருக்கும் பழைய ஏற்பாட்டு கால பாத்திரர் மேல் செல்கிறது. இப்படியாக இவர்கள் இங்கே சரியான முறைமையில் வருகிறார்கள். ஆகையால் முதற்பேறானவர்களின் சபை கூடியிருத்தலை கூறிய பிறகு பரிசுத்த பவுல் மற்றொரு வகுப்பாராகிய "பூரணராக்கப்பட்ட நீதிமான்களின் ஆவியைப்" பற்றி கூறுகிறார். இது சபையாக இருக்காது என்றும் பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்களைத்தான் குறிப்பிடுகிறது என்றும் கூற இன்னொரு காரணம் உண்டு. அதாவது, சபையோ அல்லது திரள் கூட்டத்தாரோ "பூரண மனிதர்களாக" ஆக்கப்படமாட்டார்கள். சபையானது மனித சுபாவத்தை விட்டுவிட்டு ஆவிக்குரிய வகுப்பாராக ஆவார்கள்.

ஆனால் எப்படி இந்த சொற்றொடரை பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்களுக்கு நாம் உபயோகிப்போம்? நாம் இந்த சொற்றொடரில் வார்த்தைகளை இடம் மாற்றினால் இப்படியாக இருக்கும். "ஆவிகள் பூரணமாக்கப்பட்ட பூரண மனிதர்களிடத்தில்" நாம் வருகிறோம். பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள் மாம்சத்தில் அபூரணமாக இருந்தாலும், நீதிமான்களாக இருந்தார்கள். அப்போஸ்தலர் இந்த வகுப்பாரை குறிப்பிட்டு மேன்மையான உயிர்த்தெழுதலை பெறுவார்கள் என்று நமக்கு கூறினார். ஆனால் சபையைப் போல் உன்னதமான உயிர்த்தெழுதலை பெறமாட்டார்கள். பழைய ஏற்பாட்டு

கால பாத்திரர்கள் கல்லறையிலிருந்து எழுந்து வரும் போது, மேன்மையான உயிர்த்தெழுதலை பெற்று, பூரண மாம்சத்தில் இருப்பார்கள். அவர்கள் ஆவியில் நீதிமான்களாக இருந்ததால் இளைப்பாறுதலின் காலத்தின் ஆரம்பத்தில் பூரணராக இருப்பார்கள்.

வேதவாக்கியங்களில் மலை என்பது பொதுவாக ஒரு ராஜ்யத்தை குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது. சீயோன் மலை தேவனுடைய ராஜ்யத்தை குறிப்பிடுகிறது. இந்த சீயோன் மலை ராஜ்யம் முழு உலகத்தையும் உள்ளடக் கூடியதாக இருக்கிறது. இது சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்பட இருக்கிறது. அதன் ஸ்தாபகத்தைப் பற்றி தான் அப்போஸ்தலர் விவாதித்தார். ஒரு ராஜ்யம் உருவகத்தில் ஒரு நகரமாக அழைக்கப்படுகிறது. ஆனால் சரியானபடி சொல்லுவோமானால் ஒரு மலை ஒரு தேசத்தை குறிப்பிடுகிறது. நகரம் அந்த தேசத்தின் இராஜ்யத்தை குறிப்பிடுகிறது. உருவகமாக பேசுவது இப்பொழுது மிகவும் சாதாரணமாகி விட்டது. பெர்லின் இப்படி செய்தது என்று நாம் படிப்போமானால், அது ஜெர்மனி அரசாங்கத்தை குறிக்கிறது என்பதை நாம் அறிவோம். அல்லது செயின்ட் பிட்ஸ்பார்க் இதை செய்கிறது என்று நாம் வாசித்தோமானால், அது ரஷ்ய அரசாங்கத்தை குறிக்கிறது என்று பொருள். இதே போல வாஷிங்டன் என்பது அமெரிக்காவை, லண்டன் என்பது பிரிட்டிஷ் அரசாங்கத்தையும் குறிப்பிடுகிறது.

நமது வசனம் தேவனுடைய பரிசுத்த ராஜ்யத்தை குறிக்கிறது. அதன் தனித்தன்மையை இழக்காமல், நகரம் முழு ராஜ்யத்தை குறிக்கிறது என்ற கருத்தில் அப்போஸ்தலர் பரம எருசலேமை தேவனுடைய நகரமாக பேசுகிறார். ஆகையால் ஒரு புதிய எருசலேம் ஒரு உயர்ந்த அரசங்கமாக இருக்கும். அது தேவனுடைய ராஜ்யமாக இருந்து முழு உலகத்தையும் ஆளுகை செய்யும். ஆகையால் இந்த பல்வேறு சித்திரங்கள் பூமிக்குரிய சீயோனின் ராஜ்யமாகிய எருசலேமை அதன் உண்மைப் பொருளை நமக்கு காண்பிக்கிறது. பிறகு மற்ற கூற்றுகள் தொடர்கின்றன. அதில் ஒன்று ஆவியில் நீதியாக இருந்தவர்கள் பூரணமாக்கப்படுவதும் சார்ந்திருக்கிறது. இவர்கள் முன்னரே ஆவியில் நீதிமான்களாக இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெற்று பரிபூரணமாக்கப்படுவார்கள்.

இதனோடு இணைந்த ஒரு கூற்றை நாம் பெற்றிருக்கிறோம். "அதாவது ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்கள்." இவர்கள் தேவனுக்கு மிகவும் ஊழியம் செய்ய வேண்டியவர்களான ஆவிக்குரிய தேவனுடைய தூதர்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். தன் பிதா முன்பாகவும் அவருடைய தூதர்கள் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கை பண்ணுவேன் என்று நமது கர்த்தர் பேசின போது குறிப்பிட்ட அதே தூதர்களை குறிக்கிறது என்று நாம் நினைக்கிறோம். இவர்கள் இந்த யுகம் முழுவதும் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்கிறவர்களாக இருக்கிறவர்கள். அவர்கள் நம்மை சந்திக்க வேண்டும். மேலும் நாம் தேவனிடம் அறிக்கை பண்ணப்படுதலை அவர்கள் காண வேண்டும் என்பது மிகவும் பொருத்தமாக இருக்கிறது.